# தண்டிப்பதற்குத் தகுதி உண்டா?

மாதுஅவள் பொதுச் சொத்தாவாள்,
முகிழ்விப்பாள் பொருள் கொடுத்தால்!
காதலின் தூய்மை, பெண்ணின்
கற்பதும் கட்டுப்பாடும்,
ஈதெலாம் இவள்தம் ஏட்டில்
இல்லாத பாடம், ஓர்நாள்
தோதுடை ஆடவன் பால்,
தொடர்புற்று இருந்த வேளை,

பிடித்தனர் கை மெய்யாகப்,
பிணைத்தனர் கரங்கள் தம்மை,
அடுத்தெது செயலாம் என்று
அலசினர், இயேசு முன்னால்,
தொடுத்தனர் வழக்கு. 'பாவம்
தோய்ந்துள இவளை கற்கள்
விடுத்துடன் கொலையே செய்ய
விடும்', என வேண்டி நின்றார்!

அங்கவர் வழக்குத் தன்னை
அமைதியாய்க் கேட்ட இயேசு,
'உங்களில் பாவம் செய்யா
ஒருவன்இங்கு இருப்பா னாகில்
அங்குஅவன் முதற்கல் ஏந்தி
அவளின்மேல் எறிக' என்றார்,
எங்குபோய் மறைந்தார் அன்னார்?
எவரும்அங்கு இருந்தார் இல்லை.

சாதுபோல் நடித்து குற்றம்
சாட்டினோர் அகன்ற பின்னர்,
'தீதுடைச் செயல் விடுத்துத்
திருந்திநீ வாழல் வேண்டும்
போதிநீ இன்று' என்று
போதகர் இயேசு கூறி
மாதுஅவள் செய்த பாவம்
மன்னித்தார், போனாள் மங்கை!

'கண்ணாடி வீட்டில் உள்ளோர்
கற்களை மற்றார் வீட்டில்
எண்ணாமல் எறிதல் தீது'
என்னும் இப்பாடம் தன்னை
விண்ணாளும் இயேசு நாதர்
விளக்கினார் தீர்ப்பின் மூலம்!
கண்ணாக இதனை மாந்தர்
காத்திடல் கடமை யாகும்!

க. செல்வராசா